செ.வெ.எண்: 489 நாள்: 07.08.2020

இலக்கியங்கள் அனைத்திலும் சிறந்ததும் உன்னதமானதும் மனித குலம் அனைத்திற்குமான தன்னிகரற்ற படைப்பு திருக்குறள். அத்தகைய சிறப்புமிக்க அறக்கருத்துக்களடங்கிய திருக்குறட்பாக்களை மாணவர்கள் இளம் வயதிலேயே மனப்பாடம் செய்தால் அவை பசுமரத்தாணிபோல் பதிந்து, நெஞ்சில் நிலைத்து அவர்களது வாழ்க்கைக்கு வழிகாட்டும். தாம் பெறுகின்ற கல்வியறிவோடு, நல்லொழுக்கம் மிக்கவர்களாக மாணவர்கள் உருவாக வழிவகுக்கும். எனவே, திருக்குறள் முற்றோதல் செய்யும் மாணவச் செல்வங்களுக்கு பரிசு வழங்கிப் பாராட்டுவது, மாணவர்களின் நல்வாழ்வுக்குத் துணை நிற்பதாக அமையும். அதனைக் கருத்தில் கொண்டு, 2018-2019-ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் 1330 திருக்குறளையும் ஒப்புவிக்கும் மாணவர்கள் 70 பேருக்கு திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசு தலா ரூ.10,000/- வீதம் பரிசுத் தொகை, பாராட்டுச் சான்றிதழ் வழங்கி சிறப்பிக்கப்பெறுகின்றனர்.

திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசுக்கு கலந்து கொள்ளும் மாணவர்கள், திறனறி குழுவினரால் திறனாய்வு செய்து தகுதிபெற்றவர்கள் தெரிவுசெய்யப்பெற்று, பரிசு பெறுவதற்கு அரசுக்குப் பரிந்துரை செய்யப்பெறுகிறார்கள். திறனாய்வு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மூன்றாம் தளத்திலுள்ள தமிழ் வளர்ச்சித்துறையினரால் நடத்தப்பெறும்.

<u>திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசு பெறுவதற்கான விதிமுறைகள்</u>:

- 1330 திருக்குறட்பாக்களையும் முழுமையாக ஒப்புவிக்கும் திறன் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
- இயல் எண், பெயர், அதிகாரம் எண், பெயர், குறள் எண், பெயர் போன்றவற்றை தெரிவித்தல் அதற்குரிய திருக்குறளைக் கூறும் திறன் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
- திருக்குறளின் அடைமொழிகள், திருவள்ளுவரின் சிறப்புப்பெயர்கள், திருக்குறளின் சிறப்புகள் ஆகியவற்றை அறிந்தவராக இருத்தல் வேண்டும்.
- தஞ்சாவூர் வருவாய் மாவட்டத்தில் அமைந்துள்ள பள்ளியில் பயில்பவராக இருத்தல் வேண்டும். அரசு /அரசு உதவிபெறும் /தனியார் / பதின்மப் பள்ளிகள் போன்ற பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பங்கு பெறலாம்.
- தஞ்சாவூர் வருவாய் மாவட்டத்தில் அமைந்துள்ள கலை /அறிவியல் / பொறியியல் / தொழில்நுட்பம் / தொழிற்பயிற்சி / கல்வியியல் / செவிலியர் / அரசு / அரசு உதவி பெறும் , சுயநிதிக் கல்லூரிகள் ஆகியவற்றில் பயிலும் மாணவர்கள் பங்கு பெறலாம்.

- தமிழ் வளர்ச்சித் துறையால் வழங்கப்பெறும் இப்பரிசினை இதற்கு முன்னர் பெற்றவராக இருத்தல் கூடாது.
- திருக்குறளின் பொருளும் அறிந்திருப்பின் கூடுதல் தகுதியாகக் கருதப்பெறும்.

மேற்குறிப்பிட்டவாறு, திருக்குறள் முற்றோதும் திறன்படைத்த மாணவர்கள் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மூன்றாம் தளத்தில் அறை எண் 337இல் அமைந்துள்ள தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகத்தில் விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பித்திடவும், மேலும் விவரங்களுக்கு அலுவலகத் தொலைபேசி எண்: **04362-271530**-இலும் **www.tamilvalarchithrurai.com** என்ற வலைதளத்திலும் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள்.

இவ்வாறு **தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் திரு. ம.கோவிந்தராவ் இ.ஆ.ப.** அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.